# யூலை – 13 – வெள்ளி

## புனித ஹென்றி அரசர்

## இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர் (மத்.10:22)

**முதல் வாசகம் : ஓசே 14 : 1 – 9**

ஆண்டவர் கூறுவதுஇஸ்ரயேலே! உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா. நீ உன் தீச்செயலால் வீழ்ச்சியுற்றாய்.இம்மொழிகளை ஏந்தி ஆண்டவரிடம் திரும்பிவந்து இவ்வாறு சொல்லுங்கள் "தீவினை அனைத்தையும் அகற்றியருளும், நன்மையானதை ஏற்றுக்கொள்ளும் நாங்கள் எங்கள் வாய்மொழியாம் கனிகளை உமக்கு அளிப்போம். அசீரியர் எங்களை விடுவிக்கமாட்டார்கள் குதிரைமேல் நாங்கள் ஏறமாட்டோம் எங்கள் கைவினைப் பொருள்களைநோக்கி, "எங்கள் கடவுளே!" என்று இனிச்சொல்லமாட்டோம் திக்கற்றவன் உம்மிடத்தில் பரிவைப் பெறுகிறான்" எனச்சொல்லுங்கள்.அவர்களுடைய பற்றுறுதி யின்மையை நான் குணமாக்குவேன் அவர்கள்மேல் உளமார அன்புகூர்வேன். அவர்கள் மேலிருந்த என் சினம் தணிந்துவிட்டது.நான் இஸ்ரயேலுக்குப் பனி போலிருப்பேன் அவன் லீலிபோல் மலருவான் லெபனோனின் மரம்போல் வேரூயஅின்றி நிற்பான்.அவனுடைய கிளைகள் விரிந்து பரவும் அவன் பொலிவு ஒலிவமரம்போல் இருக்கும் லெபனோனைப்போல் அவன் நறுமணம் பரப்புவான்.அவர்கள் திரும்பிவந்து என் நிழலில் குடியிருப்பார்கள் கோதுமைபோல் தழைத்தோங்குவார்கள். திராட்சைக் கொடிபோல் செழிப்படைவார்கள். லெபனோனின் திராட்சை இரசம்போல் அவர்களது புகழ்விளங்கும்.இனிமேல் எப்ராயிமுக்குச் சிலைகள் எதற்கு? நானே அவனுக்குச் செவிசாய்த்து, அவன்மேல் அக்கறை கொண்டுள்ளேன் நான் பசுமையான தேவதாரு மரம் போன்றவன். உன்கனி எல்லாம் என்னிடமிருந்தே வரும்.ஞானம் நிறைந்தவன் எவனோ, அவன் இவற்றை உணர்ந்து கொள்ளட்டும் பகுத்தறிவு உள்ளவன் எவனோ, அவன் இவற்றை அறிந்து கொள்ளட்டும் ஆண்டவரின் நெறிகள் நேர்மையானவை் நேர்மையானவர்கள் அவற்றைப் பின்பற்றி நடக்கிறார்கள் மீறுகிறவர்கள் அவற்றில் இடறி விழுகின்றார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும்

**நற்செய்தி : மத்தேயு 10 : 16– 23**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக்கூறியது: "இதோ! ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப்போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள். எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச்சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள்.என்பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச்செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள்.இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது, "என்னபேசுவது, எப்படிப் பேசுவது" என நீங்கள் கவலைப்படவேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்.ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்.சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும் தந்தையர் பிள்ளைகளையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள்.என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்.அவர்கள் உங்களை ஒரு நகரில் துன்புறுத்தினால் வேறொரு நகருக்கு ஓடிப்போங்கள். மானிட மகனின் வருகைக்குமுன் நீங்கள் இஸ்ரயேலின் எல்லா நகர்களையும் சுற்றி முடித்திருக்கமாட்டீர்கள் என உறுதியாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** இயேசுவை பின்பற்ற வேண்டும் என்று பலரும் ஆசைப்படுவார்கள். ஆனால் இயேசுவைப் பின்தொடர்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. ஒருமனிதர் இயேசுவிடம் வந்து நானும் உம்மைப் பின்தொடர்வேன் என்று சொன்ன போது இயேசு அவருக்கு பதில் மொழியாகச் சொன்னது, "நரிகளுக்குக் பதுங்கு குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிட மகனுக்கோ தலைசாய்க்கக்கூட இடமில்லை" (லூக் 9:58) என்று. மேலும், "என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்ளுகின்ற எவரும் வாழ்வடைவார்" (மத் 16:24-25) என்றும் கூறினார். இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்று எண்ணுகிற ஒவ்வொருவரும் தங்களை இழக்க வேண்டும், தங்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு இழந்து இயேசுவின் விருப்பங்களுக்கு உயிர்க்க வேண்டும். அவ்வாறு தங்களை இயேசுவுக்காக தங்களை அர்ப்பணிக்கின்ற மனிதர்கள்தான் இயேசுவின் உண்மைச் சீடர்களாக, சீடத்திகளாக இந்த உலகத்திலே வாழ முடியும். உலகத்தின் பார்வையில் இயேசுவையும், இயேசுவின் விழுமியங்களையும் பின்பற்றுவது அதற்காக துன்பப்படுவது எள்ளி நகையாடப்படலாம். ஆனால் இதிலேதான் நம்முடைய மீட்பு அடங்கியிருக்கின்றது. பிறர் நம்மைப் பார்த்து என்ன சொல்லுகிறார்கள், என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி நம்முடைய வாழ்க்கையை வீணடிப்பதில் அல்ல, மாறாக நான் விசுவசித்து ஏற்றுக்கொண்ட என் தேவனுக்கு, என்னுடைய வாழ்வால், வார்த்தையால் சான்று பகர்கின்றேனா என்பதில்தான் என்னுடைய வாழ்வின் அர்த்தம் அடங்கியிருக்கின்றது. "நாங்கள் கிறிஸ்துவின் பொருட்டு மடையர்கள். நாங்கள் உலகத்தின் குப்பை போலானோம். இதுவரை அனைத்திலும் கழிவுப்பொருட்கள் எனக் கருதப்பட்டு வருகிறோம்." (1 கொரி 4: 10,13) நாம் உலகத்திற்கு குப்பையைப்போல தோன்றினாலும் கடவுளுக்கு முன்னிலையில் மதிப்பு மிகுந்தவர்களாக, மாட்சி பெற்ற மக்களாக விளங்குவோம் என்பது நம்மைப்போன்று வாழ்ந்து மரித்த புனிதர்கள் நமக்கு எடுத்துச் சொல்லும் வாழ்வியல் விழுமியங்கள். நாமும் இயேசுவுக்கு சான்று பகர்ந்து இறுதிவரை நிலைத்திருந்து விண்ணகத்தை சுதந்தரித்துக் கொள்வோமா?